திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, அந்தக் குளத்திற்கு வேறு ஒரு கால்வாய் வழியாகத் தண்ணீர் போய்க் கொண்டிருந்தது. அணையிலே தண்ணீர் குறைந்து விட்ட காரணத்தாலே இப்போது இப்படி ஏற்பாடு செயய்யப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக ஏற்கனவே முக்கவர் பக்கத்தில் பாசனத்திற்குத் தண்ணீர் கிடைத்துக் கொண்டிருந்த நிலைமை மாறி இப்போது அங்கே பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்காமல் இருக்கிறது என்றும் பழைய முறையில் தண்ணீர் வேண்டுமென்றும் தெற்குப் பாப்பாங்குளம் பொது மக்கள் ஒரு மனு கொடுத்திருக்கிறார்கள், அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே எடுத்துச் சொன்னதைப் போன்று திருநெல்வேலி மற்றும் பெருங்கால் குளத்துப் பாசனத்தார்கள் ஆகியோரின் ஒப்புதலின் பேரில் 1 அடி உயர்த்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்குள்ள பாசனம் பாதிக்கப் பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது பற்றிய தகவலை அரசு ஆராயும்.

பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா.

*வினா 447 திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்த நாளை அரசு சார்பில் கொண்டாட அரசு எண்ணியுள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பிறந்த நாளை அரசு சார்பிலே கொண்டாட இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்காக நான் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு புரட்சிக் கவிஞர் அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் நாட்டிற்குப் புரட்சிகரமான கவிதைகளையும் எழுச்சி மிக்க கவிதைகளையும் எழுதித் தந்திருக்கிறார்கள். அவைகள் எல்லாம் ஒருசேரக் கிடைக்காவிட்டாலும், அதற்காகப் பலர் முயற்சிகளை எடுத்தும், தனியார்களுக்கு அவைகள் எல்லாம் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் ஆதிமுதல் இறுதி மூச்சு வரை எழுதியுள்ள கவிதைகளையெல்லாம் திரட்டி நமது மாநில அரசே அதை மலிவுப் புத்தகமாக வெளியிட்டு எல்லோருக்கும் அவை கிடைக்கும்படி ஏற்பாடுகளைச் செய்யுமா ?

1978 மார்ச் 8]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இது ஏற்கனவே அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிற ஒரு பிரச்சினை ஆகும். இது பற்றித் தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் சொல்லப்படும்.

திரு. மி. வின்சென்ட் : தலைவரவர்களே, பாவேந்தர் பாரதி தாசனின் கவிதைப் படைப்புக்கள் அரிதாக உள்ளன. எளிதாக அந்தப் புத்தகங்களை வாங்குவதற்கு புதிய பிரதிகளை அச்சிட்டு பாரதிதாசனின் பிறந்த நாளில் விநியோகப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இது போன்ற கேள்விக்குத்தான் முன்னாலே நான் பதில் சொல்லியிருக்கின்றேன். இப்பொழுது பிறந்த நாளன்று அதை பதிப்பகத்தார்கள் வெளியிடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யும்.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே, புரட்சிப் புலவன் பாரதிதாசனுடைய பிறந்த நாளை முன்னிட்டு அவர் எழுதிய கவிதைகளில் போட்டியை வைத்து, அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்குமிடையில் அந்தப் போட்டியை நடத்தி, பரிசுகள் வழங்குவதற்கு ஏதாவது உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இதுபோன்ற விழா நாட்களில் இப்படிப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. பாரதிதாசன் அவர்களுடைய பிறந்த நாள் விழாவிலும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிச்சாவரத்தை சுற்றுலா மையமாக்கல்.

* வினா-448 திரு. துரை. கலியமூர்த்தி : மாண்புமிகு செய்தி—சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

சிதம்பரம் வட்டம், பிச்சாவரத்தை சுற்றுலா மையமாக ஏற்படுத்த அதிகாரிகள் பார்வையிட்டுச் சென்றுள்ளதை அடுத்து எப்போது வேலை ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பிச்சாவரத்தை சுற்றுலா மையமாக மேம்படுத்த அங்கு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், படகுவீடு, தோணித்துறை ஆகியவற்றை அமைக்கலாம் என்ற திட்டம் பரிசீலனையில் உள்ளது.